தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

(ஆஐ) செஞ்சி, சூரப்பன்தாங்கல் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதே கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

***திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், பெருவளூர் ஊராட்சி, சூரப்பன்தாங்கல் கிராமத்தில் முருகேசன் மகன் முனுசாமி என்பவர் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கிறார். அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு செல்வி என்கிற மனைவியும் 2 ஆண் குழந்தைகளும் இருக்கிறார்கள். செல்விக்கு சத்துணவுக் கூடத்தில் உதவியாளர் பணி வழங்கவும், அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் அரசின் கவனத்தை தங்கள் வாயிலாக ஈர்த்து அமருகிறேன்.*

(ஆஒ) பொள்ளாச்சி, மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம், கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குதல், உழவர் பாதுகாப்புத் திட்ட நிவாரணத் தொகையை உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம் கிராமத்தில் குடியிருந்து வந்த விவசாயி திரு. பி. ஜானகிராமன் என்பவர், தோட்டத்தில் மின்சாரம் தாக்கி கடந்த 19–5–2017 அன்று இறந்துவிட்டார். இதுகுறித்து அவரது தாயார் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் உரிய நிவாரணம் கேட்டு விண்ணப்பித்துள்ளார். அவருக்கு உரிய நிவாரணத் தொகையை வழங்கிட வேண்டுமென்று தங்களின்*